www.freetnbooks.com

V11Com

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

வகுப்பு 11

நேரம் : 3.00 மணி

வணிகவியல்

மதிப்பெண்கள்: 90

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20×1=20

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1) பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு ............ என்று பெயர்.

அ) அங்காடி ஆ) சந்தை இ) நாளங்காடி ஈ) அல்லங்காடி

2) கீழ்க்கண்டவற்றுள் எது நிதிச் சேவையில் அடங்கும்?

அ) போக்குவரத்து ஆ) காவல் நிலையம்

இ) கணக்கீடு மற்றும் காப்பீடு ஈ) சிறப்புத்தொழில்

3) இந்து கூட்டுக்குடும்பம் யாரால் நிர்வகிக்கப்படும்?

அ) முதலாளி ஆ) கர்த்தா இ) மேலாளர் ஈ) கூட்டாளி

4) நிறுமத்தின் இயக்குநரை கீழ்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?

அ) கடனீந்தோர் ஆ) கடனாளர் இ) கடனீட்டுப் பத்திரதாரர் ஈ) பங்குதாரர்கள்

5) அனைத்து கூட்டுறவுகளும் நிறுவப்படுவதற்கு ............

அ) தொண்டு நிறுவன நோக்கம் ஆ) சேவை நோக்கம்

இ) இலாப நோக்கம் ஈ) சீர்திருத்த நோக்கம்

6) முத்ரா வங்கி ............ வங்கிக்கு உதாரணம்.

அ) வெளிநாடு ஆ) வளர்ச்சி இ) கூட்டுறவு ஈ) வணிக

7) பண்டகக் காப்பகம் ............ தடையை நீக்குகிறது.

அ) ஆள்சார் தடை ஆ) காலத்தடை இ) இடர்பாட்டு தடை ஈ) அறிவுத்தடை

8) ............ ஒரு சரக்கேற்றி மூலம் பொருட்களைப் பெற்றுக்கொள்வதை ஏற்றுக்கொள்வதற்கான ஆவணம்.

அ) வழிச்சீட்டு ஆ) சரக்குக்குறிப்பு

இ) கப்பல் வாடகை ஒப்பாவணம் ஈ) ஒப்பந்த இரசீது

9) காப்பீடு செய்ய முடியாத இடர்கள் எவை?

அ) இயற்கை பேரிடர்கள் ஆ) அரசியல் மாற்றங்களால் ஏற்படும் நட்டம்

இ) பொருளாதார சுழற்சியால் ஏற்படும் நட்டம் ஈ) மேற்கூறிய அனைத்தும்

10) புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை ............

அ) உற்பத்தி திறன் ஆ) செலவு குறைப்பு இ) திறன் ஈ) அலகுகள்

11) பின்வருவனவற்றில் எது சமுதாயத்திற்கு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய உதவுகிறது?

அ) வணிகத்தின் வெற்றி ஆ) விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்

இ) ஒழுக்கவியல் ஈ) தொழில்முறை நிர்வாகம்

12) நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின் ............

அ) கடனீந்தோர் ஆ) உரிமையாளர்கள்

இ) கடனாளிகள் ஈ) இவை எதுவும் இல்லை

13) சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளிக்க ............ வேறுபட்ட முறைகள் உள்ளன.

அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4

14) வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?

அ) மொத்த வியாபாரி ஆ) உற்பத்தியாளர்

இ) சில்லறை வியாபாரி ஈ) வாடிக்கையாளர்கள்

15) ............ யாவும் அஞ்சல்வழி வணிகத்திற்கு உகந்ததல்ல.

அ) நுகர்வு பொருட்கள் ஆ) அழுகும் பொருட்கள்

இ) இயந்திரங்கள் ஈ) மின்னணுப் பொருட்கள்

16) EPCயின் விரிவாக்கம் ............

அ) ஏற்றுமதி செயல்முறை குழு ஆ) ஏற்றுமதி வளர்ச்சிக் குழு

இ) ஏற்றுமதி சரக்கேற்றி குழு ஈ) ஏற்றுமதி வளர்ச்சி காங்கிரஸ்

17) உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம்

அ) நியூயார்க் ஆ) இலண்டன் இ) ஜெனிவா ஈ) பிரேசில்

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com


18) இளவருடன் செய்யும் ஒப்பந்தம் ............
அ) செல்தகு ஒப்பந்தம் ஆ) செல்லாத ஒப்பந்தம்
இ) தவிர்தகு ஒப்பந்தம் ஈ) மற்றொரு தரப்பினரின் விருப்பத்தின் பேரில்

19) ஒப்பந்த மீறலுக்கு கொடுக்கப்பட்ட இழப்பீடு
அ) சேதம் ஆ) ஊதியம் இ) பணம் ஈ) காசோலை

20) சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்
அ) ஏப்ரல் 1, 2017 ஆ) சனவரி 1, 2017 இ) சூலை 1, 2017 ஈ) மார்ச் 1, 2017

## பகுதி - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×2=14**

**வினா எண் 30க்கு கட்டாயம் பதில் அளிக்க வேண்டும்.**

21) ஏதேனும் நான்கு வணிகத் தடைகளை கூறுக.
22) தாமதமும், சிவப்பு நாடா போக்கும் என்றால் என்ன?
23) சேவை தொழில்களில் உள்ள சேவைகள் யாவை?
24) குளிர்சாதன பண்டகக்காப்பு என்றால் என்ன?
25) தடையற்ற நிறுவனம் என்றால் என்ன?
26) சிறப்புப் பண்டகச்சாலைகள் என்றால் என்ன?
27) சரக்காணை என்றால் என்ன?
28) சட்டம் என்றால் என்ன?
29) நேர்முக வரிக்கு உதாரணங்கள் தருக. (ஏதேனும் 4)
30) உலகளாவிய வைப்பு ரசீதின் மூலம் நிதி திரட்டும் இந்திய நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக. (ஏதேனும் 4)

## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×3=21**

**வினா எண் 40க்கு கட்டாயம் பதில் அளிக்க வேண்டும்.**

31) சிறுகுறிப்பு வரைக: (அ) தொழில் (ஆ) சிறப்புத்தொழில்
32) இந்து கூட்டுக்குடும்ப தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றை விவரி.
33) தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (NEFT) விளக்குக.
34) பயிர் காப்பீட்டின் பொருள் தருக.
35) மின்னணு வணிகத்தினால் வாங்குபவர்க்கு ஏற்படும் நன்மைகள் யாவை?
36) தமிழ்நாட்டில் உள்ள குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளைப் பட்டியலிடுக.
37) உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 3)
38) ஒப்பந்தத்தை யார் நிறைவேற்றலாம்?
39) சரக்கு சேவை வரியின் குறைபாடுகள் யாவை? (ஏதேனும் 3)
40) பன்னாட்டு வணிகத்தில் ஈடுபடுவதற்கான வழிமுறைகள் யாவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) அ) சிறுகுறிப்பு வரைக:
அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில் ஆ) மரபுசார் உற்பத்தித் தொழில்கள்
இ) கட்டுமானத் தொழில்கள் **(அல்லது)**
ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. (ஏதேனும் 5)

42) அ) தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை? **(அல்லது)**
ஆ) தொழில் நெறிமுறைகளின் அடிப்படைக் கூறுகளை விளக்கவும்.

43) அ) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரத்தின் ஏதேனும் ஐந்து சிறப்பியல்புகளை விவரி.

44) அ) நேரடி வரியையும் மறைமுக வரியையும் வேறுபடுத்துக. **(அல்லது)**
ஆ) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5)

45) அ) ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? **(அல்லது)**
ஆ) பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிகளை குறிப்பிடுக. (ஏதேனும் 5)

46) அ) துறைவாரிப் பண்டகசாலையின் சிறப்பியல்புகளை விவரி. **(அல்லது)**
ஆ) சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களை விவரி. (ஏதேனும் 5)

47) அ) தனி உரிமையியலின் நன்மைகளைக் கூறுக. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) சில்லறை வியாபாரிகளின் பண்புநலன்கள் யாவை?

----------

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner